ஸ்ரீ

திருமங்கை மன்னன் திருவாய் மலர்ந்தருளிய

# திருவெழுகூற்றிருக்கை.

பெருமாள்கோயில்

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்

முன்னோருரைகளைத் தழுவி

எளிய நடையில் தெளிய எழுதிய

திவ்யார்த்த தீபிகையென்னும் உரையுடன்,

**M. R.** கோவிந்தசாமி நாயுடுவால்,

சென்னை ஹாடன் அச்சுக்கூடத்தில்

அச்சிடுவிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

1928

விபவஹு

இதன் விலை 0—5—0] [தபால் செலவு வேறு.

இது கிடைக்குமிடம்:—

**M. R.** கோவிந்தசாமி நாயுடு,

"திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை" ஆபீஸ்,

32, பந்தர் தெரு, G. T., மதறாஸ்.



திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

# திருவெழுகூற்றிருக்கை.

திருவெழுகூற்றிருக்கை என்னும் இத் திவ்யப்பிரபந்தமானது இந்த உலகில் இருள் நீங்க வந்துதித்து அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்களுள் பிரதானரான நம்மாழ்வாரருளிச் செய்த சதுர்வேதஸாரமான நான்கு திவ்யப்ரபந்தங்களுக்கு ஆறங்கங்கூற அவதரித்த திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய ஆறு திவ்யப்ரபந்தங்களுள் ஒன்றும். [பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் - என்பன ஆறு திவ்யப்ரபந்தங்களாம்.]

ஸ்ரீமந்நாதமுனிகள் வகுத்தருளின அடைவில் மூன்றாவது ஆயிரமாகிய இயற்பாவில் எட்டாவது பிரபந்தமாக அமைந்தது இது.

"வென்றியே வேண்டி வீழ்பொருட் கிரங்கி வேற்கணார் கலவியே கருதி, நின்றவா நில்லா நெஞ்சினை யுடையேன்" என்றும் "சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்ப வெள்ளத் தாழ்ந்தேன்" என்றும் தாமே அருளிச்செய்தபடி விஷய ப்ரவணராய்த் திரிந்துகொண்டிருந்த இவ்வாழ்வார்தம்மை எம்பெருமான் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றி 'விஷயங்களில் ஆழ்ந்து திரிகிற இவரை சாஸ்த்ரங்களைக் காட்டித் திருத்த முடியாது, நம அழகைக் காட்டியே மீட்கவேணும்' என்று கொண்டு தன் அழகைக் காட்டிக்கொடுக்க, ஆழ்வாரும் அதைக்கண்டு ஈடுபட்டு "வேம்பின் புழு வேம்பன்றி யுண்ணாது, அடியேன் நான் பின்னுமுன் சேவடியன்றி நயவேன்" என்னும்படி அவகாஹித்தார்.

இவர் இப்படி தன் பக்கல் அவகாஹிக்கக் கண்ட எம்பெருமான் "இப்போது இவர்க்கு நம்மிடத்து உண்டான பற்று மற்ற விஷயங்களிற்போலல்லாமல் ஸம்பந்த வுணர்ச்சியை முன்னிட்டுப் பிறந்ததாக வேணும்; இல்லையேல் இப்பற்று இவர்க்கு நிலைநிற்கா தொழியினும் ஒழியும்" என்றெண்ணி எல்லாப் பொருள்களையும் விளக்குவதான திருமந்த்ரத்தையும் தனது ஸௌசீல்யம் முதலிய திருக்குணங்களையும் திருமந்த்ரார்த்தத்துக்கு எல்லை நிலமான திவ்ய தேசங்களையும் ஆழ்வார்க்குக் காட்டிக்கொடுக்க, அவரும் "**வாடினேன் வாடி**" என்று தொடங்கி எம்பெருமானுகந்தருளின இடமே பரம ப்ராப்யமென்று அநுபவித்தார்.

இங்ஙனம் அநுபவித்த ஆழ்வார்க்கு இவ்வநுபவம் நித்யமாய்ச் செல்லுகைக்காக இவரைத் திருநாட்டிலே கொண்டுபோக வேணுமெனக் கருதிய எம்பெருமான் ஸம்ஸாரத்தில் இவர்க்கு ஜிஹாஸை பிறக்கும்படி அதனுடைய தன்மையை அறிவிக்க, அறிந்தவிவர் அஞ்சி நடுங்கி "**மாற்றமுள**" என்னுந் திருமொழியிலே "இருபாடெரி கொள்ளியினுள் ளெறும்பேபோல்" "பாம்போடொரு கூரையிலே பயின்றாற்போல்" "வெள்ளத் திடைப்பட்ட நரியினம் போலே" என்று தமது அச்சத்திற்குப் பலவற்றை த்ருஷ்டாந்தமாகச் சொல்லிக் கதறினார்.

இப்படி இவர் கதறிக்கதறி "பணியாயெனக் குய்யும் வகை பரஞ்சோதீ!" என்றும், "அந்தோ வருளாய் அடியேற்குன்னருளே" என்றும் சொல்லி வேண்டினவிடத்தும், சிறுகுழந்தைகள்

பசி பசி யென்று கதறியழுதாலும் அஜீரணம் முதலியவை கழித்து உண்மையான பசி உண்டாமளவும் சோறிடாத தாயைப் போலே, எம்பெருமான் ' இவர்க்கு முற்றமுதிர்ந்த பரமபக்தி பிறக்கு மளவும் நாம் முகங்காட்டுவோமல்லோம்' என்று உதாஸீநனாயிருக்க; ஒரு க்ஷணமும் அவனைப் பிரிந்திருக்கமாட்டாத ஆழ்வார், மிகுந்த தாஹங்கொண்டவர்கள் நீரிலே விழுந்து நீரைக் குடிப்பதும் நீரை வாரி மேலே இறைத்துக்கொள்வதும் செய்யுமாபோலே, அவ்வெம் பெருமானை வாயாலே பேசியும் தலையாலே வணங்கியும் நெஞ்சாலே நினைத்தும் தரிக்கப்பார்த்தார்—திருக்குறுந்தாண்டக மென்னும் திவ்யப்ரபந்தத்திலே.

தாஹம் அளவற்றதாயிருக்கச் சிறிது குடித்த தண்ணீர் த்ருப்தியை உண்டுபண்ணாமல் மேலும் விஞ்சிய விடாயைப் பிறப்பிக்குமா போலே, இவர் திருக்குறுந்தாண்டகத்தில் அநுபவித்த அநுபவம் பழைய அபிநிவேசத்தைக் கிளப்பிப் பெரிய ஆர்த்தியை உண் டாக்கவே, "நின்னடியிணை பணிவன் வருமிடரகல மாற்றோவினையே" என்று ஆர்த்தராய்ச் சரணம் புகுகிறார்—இத்திருவெழு கூற்றிருக்கை யென்னும் திவ்யப்ரபந்தத்திலே.

## "திருவெழுகூற்றிருக்கை" என்றால் என்ன?

இத்திருமங்கையாழ்வார், தமிழ்க்கவிகளில் தலையானவர் என் பது உலகறிந்த விஷயம். ஆசுகவி என்றும், மதுரகவி என்றும் சித்திரக்கவி என்றும், வித்தாரக்கவியென்றும், கவிகளில் நான்கு வகைகள் உண்டு. அருமைப்பட்டுச் சொற்களைச் சேர்த்து மஹாப் ப்ரயாஸமாய்ப் பாடுகையன்றியே பல நிபந்தனைகளோடு கூடிய பாடல்களையும் விரைவில் பரவசமாகப் பாடுதலாகிற ஆசுகவித்வ மும், தொடையும் தொடைவிகற்பமுஞ் செறியச் சொற்சுவையும் பொருட்சுவையும் விளங்கப் பலவகை அலங்காரங்களும் பொலியப் பாடுதலாகிற மதுரகவித்வமும், கலிவெண்பா முதலியன விரித்துப் பாடுதலாகிற விஸ்தார கவித்வமும் இவ்வாழ்வாருடைய திவ்ய ப்ர பந்தங்களாகிய பெரியதிருமொழி திருத்தாண்டகங்கள் திருமடல் களாமவற்றில் நன்கு விளங்கும்.

இனி மிகுந்துள்ளது சித்ரகவித்வம். இதன் வகைகள் பல; "ஏகபாதமும் எழுகூற்றிருக்கையும், காதைக்கரப்பும் கரந்துறைச் செய்யுளும். கூடச்சதுக்கமும், கோமூத்திரியும், இவைமுதலான

சித்திரக்கவியே" என்றும், "மாலைமாற்றே சக்கரஞ் சுழிகுளம், ஏகபாதம் எழுகூற்றிருக்கை, காதைகரப்பே கரந்துறைப்பாட்டே, பாதமயக்கே பாவின் புணர்ப்பே, கூடசதுக்கம் கோமூத்திரியே, ஓரினத்தெழுத்தாலுயர்ந்த பாட்டே, ஒற்றுப்பெயர்த்தல் ஒருபொருட்பாட்டே, சித்திரப்பாவே விசித்திரப்பாவே, விகற்ப நடையே வினாவுத்தரமே, சருப்பதோபத்திரம் சார்ந்தவெழுத்தே, வருக்கமுமற்றும் வடநூற்கடலுள், ஒருக்குடன் வைத்த உதாரணை நோக்கி, விரித்து மறைக்கும் மிறைக்கவிப்பாட்டும், தெரிந்துப் பாடுவது சித்திரகவியே" என்றும் இலக்கண நூல்களில் அவ்வகைகள் வகுக்கப்பட்டுள்ளன. எனவே, எழுகூற்றிருக்கை யென்பது சித்திரக்கவிகளிற் சேர்ந்ததாம்.

சக்ரபந்தம், பத்மபந்தம், முரஜபந்தம், நாகபந்தம், ரதபந்தம் என வடமொழிப் புலவர்கள் கவிகஞ்செய்வதுபோலவே தமிழர்களுஞ் செய்வதுண்டு. இவற்றின் லக்ஷணங்களும் இலக்கண நூல்களிற் கூறப்பட்டுள்ளன. ஸம்ஸ்க்ருதத்தில் சிசுபாலவத மஹாகாவ்யம், யமகரத்நாகரம், பாதுகாஸஹஸ்ரம், லக்ஷ்மீஸஹஸ்ரம், ப்ரதாபருத்ரீயம் முதலிய நூல்களில் பலபல பந்தங்களில் விசித்திரமாக ச்லோகங்களை யமைத்துக் கவனஞ் செய்திருப்பதுபோலத் தமிழிலும் சில புலவர்கள் சித்திரக்கவிகள் பாடியிருக்கின்றனர். எழுகூற்றிருக்கை யென்பது ரதபந்தத்தில் அமைக்கத்தக்க ஒரு பாசுரம். (ரதமாவது தேர்.) தேரின் உருவந்தோன்றக் கட்டங்கள் போட்டு அவற்றில் எண்முறையே பாசுரப்பகுதிகளை அடக்கவேண்டும். தேரானது மேற்பாகமென்றும் கீழ்ப்பாகமென்றும் இரண்டுபாகங் கொண்டதாயிருக்கும். ஒவ்வொரு பாகத்திலும் எழுகூறுகள் உண்டாம்படி கீறவேண்டும். அப்படி கீறும்போது, முதற்கூறு மூன்று அறையும், இரண்டாங்கூறு ஐந்து அறையும், மூன்றாங்கூறு ஏழு அறையும், நான்காங்கூறு ஒன்பது அறையும், ஐந்தாங்கூறு பதினோரறையும் ஆறாங்கூறு பதின்மூன்றறையும் ஏழாங்கூறும் அங்ஙனமேயாக இப்படி ஒன்றற்கொன்று இரண்டறை மேற்பட முறையே கீறவேண்டும். மேற்பாகத்தில் தலையிலிருந்தும் கீழ்ப்பாகத்தில் அடியிலிருந்தும் இந்த க்ரமங் கொள்ளத்தக்கது. வீரசோழியம் முதலிய இலக்கண நூல்களில் இதன் லக்ஷணம் மிக்க சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது.

இதில் எண்களை மாத்திரம் இலக்கணப்படி நிரப்பியிருக்கிறோம்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 | 1 | | | | | |
| | | | | 1 | 2 | 3 | 2 | 1 | | | | |
| | | | 1 | 2 | 3 | 4 | 3 | 2 | 1 | | | |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 4 | 3 | 2 | 1 | | |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |

ரதபந்தம்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 4 | 3 | 2 | 1 | | |
| | | | 1 | 2 | 3 | 4 | 3 | 2 | 1 | | | |
| | | | | 1 | 2 | 3 | 2 | 1 | | | | |
| | | | | | 1 | 2 | 1 | | | | | |

இந்த எண்கள் முறையே பாசுரப் பகுதிகளை நிரம்பக்கொண்ட ரதபந்தம் அடுத்த பக்கத்தில்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1<br>ஒரு<br>பேருந்தி | 2<br>இரு<br>மலர்த்<br>தவிசில் | 1<br>ஒருமுறை<br>யயனை<br>யீன்றனை | | | | | |
| | | | | 1<br>ஒருமுறை | 2<br>இருசுடர்<br>மீதினி<br>லியங்கா | 3<br>மும்மதி<br>ளிலங்கை | 2<br>இருகால்<br>வளைய | 1<br>ஒரு சிலை | | | | |
| | | | 1<br>ஒன்றிய | 2. ஈரெயிற்<br>றழல்வாய்<br>வாளியி<br>னட்டனை | 3<br>மூவடி | 4. நால்<br>நிலம்<br>வேண்டி | 3. முப்புரி<br>நூலொடு<br>மானுரி<br>யிலங்கு... | 2<br>இரு<br>பிறப்பு | 1<br>ஒரு<br>மாணாகி | | | |
| | | 1<br>ஒரு<br>முறை | 2<br>ஈர் அடி | 3<br>மூவுல<br>களந்<br>தனை | 4<br>நால்திசை<br>நடுங்க | 5<br>அஞ்சிறைப்<br>பறவை<br>யேறி | 4<br>நால்வாய் | 3<br>மும்<br>மத்து | 2<br>இரு<br>செவி | 1. ஒருதனி<br>வேழத்<br>தரந்தை<br>யை | | |
| | 1<br>ஒரு<br>நாள் | 2<br>இருநீர்<br>மடுவுள்<br>தீர்த்தனை | 3<br>முத்தீ | 4<br>நால்மறை | 5<br>ஐவகை<br>வேள்வி | 6. அறு<br>தொழி<br>லந்தணர்<br>வணங் ... | 5<br>ஐம்புலன<br>கத்தினுள்<br>செறுத்து | 4<br>நான்கு<br>உட<br>னடக்கி | 3<br>முக்<br>குணத்து | 2<br>இரண்டை<br>வை அக<br>ற்றி | 1<br>ஒன்றி<br>னில் | |
| 1<br>ஒன்றி<br>நின்று<br>ஆங்கு | 2. இருபிற<br>ப்பு அறுப்<br>போர் அறி<br>யும்...... | 3<br>முக்கண் | 4<br>நால்<br>தோள் | 5<br>ஐவாய்<br>அரவொடு | 6. அறு<br>பொதி<br>சடையோ<br>னறிவ... | 7 எழுலகெ<br>யிற்றினில்<br>கொண்ட<br>னைகூறிய | 6. அறுசு<br>வைப்பயனு<br>மாயினை<br>சுடர்விடும் | 5. ஐம்ப<br>டை அங்<br>கையுளம<br>ர்ந்தனை | 4<br>நால்<br>தோள் | 3<br>முந்நீர்<br>வண்ண<br>னின் | 2<br>ஈர் அடி | 1<br>ஒன்றிய<br>மனத்<br>தால் |
| 1<br>ஒருமதி<br>முகத்து<br>மங்கையர் | 2. இருவ<br>ரும் மலரா<br>ன அங்கை<br>யில் | 3.முப்பொ<br>ழுதும்<br>வருட<br>அறிதுயி... | 4 நால்<br>வகை வரு<br>ணமும்<br>ஆயினை... | 5<br>ஐம்பெரும்<br>பூதமும்<br>நீயே | 6 அறுபத<br>முரலும்<br>கூந்தல்<br>காரணம் | 7 ஏழ்வி<br>டை அடங்<br>கச் செற்<br>றனை | 6. அறுவ<br>கைச் சமய<br>முமறி வரு<br>நிலையினை | 5 ஐம்பால்<br>ஓதியை<br>ஆகத் திரு<br>த்தினை | 4<br>நான்கு<br>அவையாய்<br>மூர்த்தி | 3<br>:<br>மூன்றாய் | 2<br>இரு<br>வகைப்<br>பயனாய் | 1<br>ஒன்றாய்<br>விரிந்து<br>நின்றனை |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1<br>ஒருமதி<br>முகத்து<br>மங்கையர் | 2. இருவ<br>ரும் மலரா<br>ன அங்கை<br>யில் | 3. [illegible]<br>முதும்<br>வருட்<br>அறிதுயி.. | 4 நால்<br>வகை வரு<br>ணமும்<br>ஆயினை... | 5<br>ஐம்பெரும்<br>பூதமும்<br>நீயே | 6 அறுபத<br>முரலும்<br>கூந்தல்<br>காரணம் | 7 எழுவி<br>டை அடங்<br>கச் செற்<br>றனை | 6. அறுவ<br>கைச் சமய<br>முமறி வரு<br>நிலையினை | 5 ஐம்பால்<br>ஓதியை<br>ஆகத் திரு<br>த்தினை | 4<br>நான்கு<br>அவையாய்<br>மூர்த்தி | 3<br>மூன்ருய் | 2<br>இரு<br>வகைப்<br>பயனுய் | 1<br>ஒன்ருய்<br>விரிந்து<br>நின்றனை |
| 1<br>ஒன்றி<br>நின்று<br>ஆங்கு | 2. இருபிற<br>ப்பு அறுப்<br>போர் அறி<br>யும்...... | 3<br>முக்கண் | 4<br>நால்<br>தோள் | 5<br>ஐவாய்<br>அரவோடு | 6. ஆறு<br>பொதி<br>சடையோ<br>னறிவ... | 7 ஏழுலகெ<br>யிற்றினில்<br>கொண்ட<br>னைகூறிய | 6. அறுசு<br>வைப்பயனு<br>மாயினை<br>சுடர்விடும் | 5. ஐம்ப<br>டை அங்<br>கையுளம<br>ர்ந்தனை | 4<br>நால்<br>தோள் | 3<br>முந்நீ<br>வண்ண<br>நின் | 2<br>ஈர் அடி | 1<br>ஒன்றிய<br>மனத்<br>தால் |
| | 1<br>ஒரு<br>நாள் | 2<br>இருநீர்<br>மடுவுள்<br>தீர்த்தனை | 3<br>முத்தீ | 4<br>நால்மறை | 5<br>ஐவகை<br>வேள்வி | 6. அறு<br>தொழி<br>லந்தணர்<br>வணங் ... | 5<br>ஐம்புலன<br>கத்தினுள்<br>செறுத்து | 4<br>நான்கு<br>உட<br>னடக்கி | 3<br>முக்<br>குணத்து | 2<br>இரண்ட<br>வை அக<br>ற்றி | 1<br>ஒன்றி<br>னில் | |
| | | 1<br>ஒரு<br>முறை | 2<br>ஈர் அடி | 3<br>மூவுல<br>களந்<br>தனை | 4<br>நால்திசை<br>நடுங்க | 5<br>அஞ்சிறை<br>ப்பறவை<br>யேறி | 4<br>நால்வாய் | 3<br>மும்<br>மதத்து | 2<br>இரு<br>செவி | 1. ஒருதனி<br>வேழத்<br>தரந்தை<br>யை | | |
| | | | 1<br>ஒன்றிய | 2. ஈரயிற்<br>றழல்வாய்<br>வாளியி<br>னட்டனை | 3<br>மூவடி | 4. நால்<br>நிலம்<br>வேண்டி | 3. முப்புரி<br>நூலொடு<br>மானுரி<br>யிலங்கு... | 2<br>இரு<br>பிறப்பு | 1<br>ஒரு<br>மாணி | | | |
| | | | | 1<br>ஒருமுறை | 2<br>இருசுடர்<br>மீதினி<br>லியங்கா | 3<br>மும்மதி<br>ளிலங்கை | 2<br>இருகால்<br>வளைய | 1<br>ஒரு சிலை | | | | |
| | | | | | 1<br>ஒரு<br>பேருந்தி | 2<br>இரு<br>மலர்த்<br>தவிசில் | 1<br>ஒருமுறை<br>யயனை,<br>யீன்றனை | | | | | |

நாலாயிரத்திவ்யப்ரபந்த மூலப்பதிப்பில், இத்திருவெழுகூற்றிருக்கைப் பிரபந்தத்திற்குச் சார்பாக ரதபந்தம் அழகாக அச்சிட்டுச் சேர்க்கப்பட்டிருப்பதைப் பலரும் கண்ணுற்றிருப்பார்கள். நாமும் இங்கே சுருக்கமாகப் பந்தமிட்டுக் காட்டிளோம்.

தேரின் உருவந்தோன்றவும், அந்தத் தேரின் மேற்பாகத்தில் ஏழுகூறுகள் தோன்றவும் கீழ்ப்பாகத்திலும் அப்படியே ஏழுகூறுகள் தோன்றவும், முதற்கூறு மூன்று அறையும் இரண்டாங்கூறு ஐந்தறையும்..............ஒன்றற்கொன்று இரண்டறை மேற்படக் கீறியுள்ளமை தோன்றவும் இந்தப் பந்தம் அமைக்கப்பட்டிருக்குமாறு காண்க. இதில் இலக்கணப்படி எண்களை நிரப்பிக்காட்டியிருக்கிறோம். இந்த எண்களை அர்த்த சக்தியாலாயினும் சப்த சக்தியாலாயினும் நினைப்பூட்டும் சொற்கள் திருவெழுகூற்றிருக்கைப் பிரபந்தத்தில் தொடுக்கப்பட்டுள்ளன. முதலில் குறிப்பிட்ட பந்தத்தில் எண்கள் அமைத்திருக்கிற முறைமையாகவே அந்தந்த அறைகளில் அந்தந்த எண்களைக் காட்டுஞ் சொற்கள் கொண்ட வாக்கியங்களை நிரப்பிக்கொள்ள வேண்டும். அங்ஙனம் நிரப்பிக் காட்டிய பந்தமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இங்ஙனம் பாடியதில் என்ன விசித்திரமென்றால், பல விசித்திரங்களுண்டு. அவற்றையெல்லாம் இங்குத் தெளிவாக எழுதிக் காட்டப்புகுந்தால் மிக்க விரிவாகும். ஸாமாந்ய புத்திமான்களும் தாங்களே உற்றுநோக்கினால் எல்லாவிசித்திரங்களும் நன்கு புலப்படும். அன்றி வல்லார் வாயினும் கேட்டறியலாம். 1. 2. 3. 4. 5. 6. 7. எண்கள் தேரைச்சுற்றி ஒன்றன்பின் ஒன்றாய் மாலையாக அமைந்திருத்தல் இதில் முக்கியமான அழகு. அந்த எண் முறையே சொற்கள் அமையவும் பொருள் சிறக்கவும் தொடுத்திருத்தல் மிக்க வல்லமை.

இப்பிரபந்தத்தில் சில இடங்களில் எண்ணுக்கு வாசகமான சொல் இன்றியே ஸ்மாரகமான சொல் இருந்தாலும் குற்றமில்லை. அதாவது:—“ ஒரு பேருந்தி இருமலர்த்தவிசில் ” என்ற விடத்து இரு என்ற சொல்லானது இரண்டு என்னும் எண்ணுக்கு வாசகமன்றியே பெருமைப்பொருளதாய் சப்த சக்தியால் மாத்திரம் எண்ணை நினைப்பூட்டுகின்றது. இங்ஙனமே, ஒன்றிய, அஞ்சிறை, நால்வாய், இருநீர், ஒன்றி, ஆறுபோதி என்ற விடங்களும் நோக்கத்தக்கன. அர்த்த சக்தியினாலேயே எண்ணைக் காட்டவேணுமென்னும் நியதி இல்லை. சப்த சக்தியாலும் காட்டலாம். வடமொழியினும்

இங்ஙனே யுண்டு. ஓரிடங் காட்டுவோம்; ஸ்ரீ ஸூக்தரசநத்திகத்தில் "ఏకం లోకస్య చక్షుః" [ஏகம் லோகஸ்ய சக்ஷுஃ] என்ற பத்தாம் ச்லோகத்தில் 1. 2. 3. 4. 5. 6. 7. 8. 9. 10. 100. 1000. என்கிற எண்களைக் காட்டும் முறையாகச் சொற்களை யடுக்கிவருகையில் ஒன்பது என்னும் ஸ்தாநத்தில் பிரயோகிக்கப்பட்ட நவ என்னுஞ் சொல்லானது அவ்விடத்தில் அந்த எண்ணுக்கு வாசக மன்றியே நூதனமென்னும் பொருளில் வந்தமையும் மற்றுங் காண்க. ["నవేన ప్రీణితజ్యద్ధశాశ్హ"]

எம்பெருமானுடைய ஸ்வரூபம் ரூபம் குணம் விபூதி முதலியவற்றை விசதமாக அநுபவித்து அவ்வநுபவம் உள்ளடங்காமல் வழிந்து புறப்பட்ட ஸ்ரீஸூக்திகளாகிய திவ்ய ப்ரபந்தத்தில் இவ்வகையான இலக்கணங்கள் வழுவாமே அமைந்தது எதுபோல வென்னில்; துக்கம் உள்ளடங்கமாட்டாமல் வால்மீகி முனிவர் வாயினின்றும் வெளிவந்த "மாநிஷாத ப்ரதிஷ்டாம்" என்கிற ச்லோகம் அவருடைய நினைவாலன்றியே நான்முகக் கடவுளின் ப்ரஸாதத்தால் லக்ஷணக்குறையின்றியே அவதரித்தாற்போல் எம்பெருமானது திருவருளால் இவ்வகையான விசித்திரப் பிரபந்தம் திருவவதரித்த தென்க. ஸாமாந்யனான பிரமனது அநுக்ரஹமே அவ்வளவு செய்த தென்றால், ஸாக்ஷாத் எம்பெருமானுடைய திருவருள் எவ்வளவு செய்யுமென்பதில் வாய் திறக்கவுண்டோவழி. எனவே, இது ஸ்வப்ரயத்ந பூர்வகமான பிரபந்தமன்றென்றதாயிற்று.

ஆழ்வார்களுள் திருமங்கைமன்னனொருவர்தாம் இவ்வகையான சித்திரக்கவி பாடியருளினர். பிற்பட்டவர்களில், **திருக்குருகைப் பெருமாள் கவிராயர்** என்னும் பரம பண்டித பாகவதோத்தமர் தாம் பாடிய **மாறனலங்கார** மென்னும் சிறந்த நூலில் சொல்லணியியலில் [நம்மாழ்வார் விஷயமாக] ஒரு எழுகூற்றிருக்கை பாடியுள்ளார். "ஒருநனித்திகிரியினிரு விசும்பொழுக்கத், தொரு ஞான்றொருபக லொடியாவுழப்பின்" என்று தொடங்கி, "ஞானபூரண சுபோதய நாவீற, மான பூடண குருகாபுரிவரோதய,..........கைம்மாறெவனீ கைக்கொண்டதுவே" என்று தலைக்கட்டியுள்ள பாசுரங்காண்க.

சைவசமயாசிரியர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் இயற்றிய தேவாரப் பதிகங்களுள்ளும் (முதல் திருமுறையில்) ஒரு எழுகூற்றிருக்கை யுண்டு. "ஓருருவாயினை மானாங்காரத்தீரியல்பா

யொரு விண்முதல் பூதலும்" என்று தொடங்கி, "நின்னை நினையவல்லவரில்லை நீணிலத்தே" என்று முடிக்கப்பட்டுள்ளமை காண்க.

பதினோராந் திருமுறையிலும் நக்கீரர் பாடிய ஒரு எழுகூற்றிருக்கையுண்டு. "ஒருடம்பீருருவாயினை" என்று தொடங்கி, "பாதஞ் சென்னியிற் பரவுவன் பணிந்தே" என்று முடிக்கப்பட்டுள்ளமை காண்க.

ஆக, ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் இரண்டும், சைவசமயத்தில் இரண்டுமாக நான்கு எழுகூற்றிருக்கைப் பிரபந்தங்கள் இதுகாறும் அவதரித்தனவாகக் காண்கின்றன. இன்னமு முண்டேற் கண்டு கொள்வது.

முற்கூறியபடியே கோடுகள் கீறி அறைகளில் எண்களை நிரப்ப வேணுமென்ற நியமமின்றியே ஒவ்வொரு அறையில் ஒவ்வோரெழுத்தை நிரப்பி விசித்திரப்படுத்துதலாகிற வேறுவகையான ரதபந்தமும் உண்டு. மாறனலங்காரம் முதலிய நூல்களில் அதுவும் காணத்தகும். எணகள் நிரம்பக்கொண்ட ரதபந்தமே எழுகூற்றிருக்கை யெனப்படும்.

இத்திவ்ய ப்ரபந்தததில் "ஒரு பேருந்தி" என்று தொடங்கி "இருவகைப்பயனாய் ஒன்றாய் விரிந்துநின்றனை" என்னுமளவுமே அறைகளில் அடைக்கததருவன; அதற்குமேல் "குன்றாமதுமலர்ச் சோலை" என்று தொடங்கியுள்ளவை ஸ்தோத்ரஸமாப்தி. அதனைத் தேரின் நடுமண்டபத்தில் அமைத்துக்கொள்ளலாம்.

இததிவ்வியப் பிரபந்தம் நாற்பத்தாறடிகளிலமைந்த ஒரு ஆசிரியப்பா. அடியொன்றுக்கு நான்கு சீராய் இயற்சீர் பயின்றும் வெண்சீர் விரவியும் மூன்றடிக்குக் குறையாமல் பலவடிகளால் அகவலோசையுற்று இறுதியில் 'ஏ' யென்னு மிசையுடன் முடிவது ஆசிரியப்பாவாம்.

இவ்வாசிரியப்பா-நேரிசை யாசிரியப்பா, நிலைமண்டில வாசிரியப்பா முதலிய நான்கு வகைகளையுடையது. எல்லாவடிகளும் நாற்சீராய் ஈற்றயலடி முச்சீராய் முடிவது நேரிசையாசிரியப்பா. எல்லாவடிகளும் நான்கு சீராலேயே முடிவது நிலைமண்டிலவாசிரியப்பா. இப்பிரபந்தம் எல்லாவடிகளும் நாற்சீராய் முடிந்தமையால் நிலைமண்டிலவாசிரியப்பாவாயிற்று.........................................*

ஸ்ரீ:

திருவெழுகூற்றிருக்கையின் தனியன்.

(எம்பெருமானார் அருளிச் செய்தது.)

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

பதவுரை

| | | | |
|---|---|---|---|
| பரகாலன் | புறமதத்தவர்கட்கு யமன் போன்ற திருமங்கையாழ்வார் | வாள்வலியால் | தமது வாளின் வலிமையினால் |
| வாழி | வாழ்ந்திடுக; | மந்திரம் கொள் | திருமந்திரத்தைப் பெற்றவராயும் |
| கலிகன்றி | கலியைக் கெடுத்த திருமங்கையாழ்வார் | தூயோன் | பரமபரிசுத்தராயுமிருக்கிற |
| வாழி | வாழ்ந்திடுக. | மங்கையர் கோன் | திருமங்கையாழ்வாரது |
| குறையலூர் | திருக்குறையலூரில் | சுடர் | ஒளிபொருந்தியதும் |
| வாழ் | வாழ்கின்ற | மானம் | பெருமை பொருந்தியதுமான |
| வேந்தன் | அரசரான திருமங்கையாழ்வார் | வேல் | கொற்ற வேலானது |
| வாழி | வாழ்ந்திடுக; | வாழி | வாழ்ந்திடுக. |
| மாயோனை | எம்பெருமானிடத்தினின்று | | (அரோ—அசை.) |

—***— எம்பெருமானுக்குத் திருமதிள்போல் அரணாயிருப்பவையான ஆறு திவ்யப்ரபந்தங்களைச் செய்தருளின திருமங்கையாழ்வாரையும் அவரது திவ்யாயுதத்தையும் வாழ்த்துகிறது இது.

எம்பெருமானது வைபவங்களைப் பொறுத பாவிகளைக் கண்டித்து ஒழிப்பவரும், கலிதோஷம் நீங்கும்படி உலகை வாழ்விப்பவரும், திருக்குறையலூரைத் திருவவதாரஸ்தலமாகவுடையவரும் மங்கைநகர்க்கு அரசருமான திருமங்கையாழ்வார் பல்லாண்டு பல்லாண்டு வாழவேணும். அவரது திருக்கையிலே திகழ்வதும், எம்பெருமானை வெருட்டித் திருமந்திரோபதேசம் செய்வித்துக் கொண்டதுமான வேலும் வாழி என்றதாயிற்று.

பின்னடிகளில் அறியவேண்டிய வரலாறு:- ஸ்ரீமந்நாராயணன் இவரை விசேஷகடாக்ஷம்பண்ணி அங்கீகரிக்கத் திருவுள்ளம்பற்றி ஒரு பிராமண வேடங்கொண்டு பல அணிகலங்களைப்பூண்டு மண

வாளக்கோலமாய்மனைவியுடனே இவரிருக்கிறவழியிலேயெழுந்தருள, திருமணங்கொல்லையில் அரசமரத்தின்கீழ்ப் பதிவிருந்த இவர் கண்டு எதிரே ஓடிச்சென்று தம்வாளை யுருவி வெருட்டி அவர்களுடைய ஸகல ஆபரணங்களையும் பறித்துக்கொண்டு திருவடி விரலிலணிந்த அறுகாழியையும் பறித்துக்கொள்ளப் பற்களால் கடித்திழுத்தும் வரக் காணாமல் எழுந்திருந்து ‘இது கழற்றவொண்ணாமல் நீ ஏதோ மந்த்ரவாதம் பண்ணினாய்போலும்; அந்த மந்திரத்தை எனக்குச் சொல்’ என்று தம்முடைய வாள்வலியாலே நிர்ப்பந்தித்துக்கேட்க, பெரிய பெருமாளும் ‘அந்த மந்திரத்தை உமக்குச் சொல்லுகிறேன், வாரும்’ என்று ஆழ்வாருடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு ஸகல வேதஸாரமான திருவஷ்டாக்ஷர மஹா மந்த்ரத்தை வலது திருச்செவியில் உபதேசித்தருளினன் என்பதாம்.

**தூயோன்**-ஆழ்வார் பலவகைக் களவுகள் செய்தாலும் அவையெல்லாம் பகவத்பாகவத ஸமாராதனத்தில் விநியோகப்பட்டமையால் அச்செயல்களால் ஆழ்வாருக்கு யாதொரு அவத்யமும் உண்டாகவில்லை யென்பதும், பரம பரிசுத்தியே ஆயிற்றென்பதுந் தோன்றத் **தூயோன்** என விசேஷிக்கப்பட்டார் என்க.

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிக்களே சரணம்.

திருமங்கையாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

# திருவெழுகூற்றிருக்கை.

பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்யர் ஸ்வாமி அருளிச்செய்த

திவ்யார்த்த தீபிகை யென்னும் உரையுடன் கூடியது.

ஒரு பேருந்தி யிருமலர்த் தவிசில் *
ஒரு முறை யயனை யீன்றனை *

பதவுரை.

| | | | |
|---|---|---|---|
| ஒரு | விலக்ஷணமாய் | தவிசில் | ஆஸனத்தின் மீது |
| பேர் | பெருமை பொருந்திய | ஒருமுறை | ஒருகால் |
| உந்தி | திருநாபியிலுண்டான | அயனை | பிரமனை |
| இரு | பெரிதான | ஈன்றனை | படைத்தருளினுய். |
| மலர் | (தாமரைப்) பூவாகிற | | |

—***— உலகங்களடங்கலும் பிரளயங் கொண்டபின் மீண்டும் உலகங்களைப் படைக்க வேண்டி எம்பெருமான் தனது திருநாபிக் கமலத்தில் நான்முகக் கடவுளைப் படைத்து அவனுக்கு வேதங்களைப் பழையபடியே ஓதுவித்து அப்பிரமனைக் கொண்டு முன்போலவே எல்லா வுலகங்களையும் படைப்பதாக நூல்கள் கூறும். " உய்ய வுலகு படைக்க வேண்டி உந்தியில் தோற்றினாய் நான் முகனை " என்றார் பெரியாழ்வாரும்.

உத்பத்திக்கு ஹேதுவான நீயே ரக்ஷணமும் பண்ண வேண்டாவோ? என்கைக்காக ஆழ்வார் முதலிலே இதனை அருளிச் செய்தாரென்க, தவிசு—ஆசனம். .... .... .... ....*

... ... ... ஒரு முறை
இருசுடர் மீதினி லியங்கா * மும்மதிள்
இலங்கை இருகால் வளைய * ஒருசிலை
ஒன்றிய ஈரெயிற்றழல் வாய்வாளியின்
அட்டனை * ... ... ... ..

| | | | |
|---|---|---|---|
| ஒரு முறை | ஸ்ரீ ராமனாய் யவதரித்த ஒரு காலத்தில், | இரு கால் வளைய | இரண்டு நுனியும் வளைந்த |
| இருசுடர் | சந்திர ஸூர்யர்கள் | ஒரு சிலை | ஒப்பற்ற சார்ங்க வில்லில் |
| மீதினில் இயங்கா | (அச்சத்தினால்) மேலே ஸஞ் சரிக்க வொண் ணாததும் | ஒன்றிய ஈர் எயிறு | பொருந்தியதும் இரண்டு பற்களை யுடையதும் |
| மும்மதிள் | நீர்க் கோட்டை, மலைக்கோட்டை, வனக்கோட்டை என்கிற மூன்று துர்க்கங்களை யுடையதுமான | அழல் வாய் | நெருப்பைக் கக்குகிற வாயை யுடையதுமான |
| | | வாளியின் | அம்பினால் |
| இலங்கை | லங்காபுரியை | அட்டனை | நீறாக்கினாய். |

—***— கீழ் வாக்கியத்தில் உலகங்களைப்படைத்தமை சொன்னார்; படைத்த உலகத்திற்குத் தீங்கு நேருங்காலத்தில் பட்டாதனைபட்டு ரக்ஷிக்கிறபடியைச் சொல்லுகிறார் இதில். குளவிக்கூடு போலே ராக்ஷஸர்களுக்குக் கூடாகிய இலங்கையை நீறுபடுத்தினபடியைச் சொல்லுகிறார். தேவதைகள் அனைவரும் இராவணனுக்கு அஞ்சி நடுங்கி மறைந்து வாழ்ந்தனராதலால். ஸூர்ய சந்திரர்களும் இலங்கையின் மேலே ஸஞ்சரிக்க மாட்டார்களாம்; ஆகவே, இருசுடர் மீதினியங்காத இலங்கையாயிற்று. " பகலவன் மீதியங்காத இலங்கை " என்றார். பெரிய திருமொழியிலும். (7-8-7)

இருசுடர்—இரண்டு சுடர்ப்பொருள்கள்; அவையாவன சந்திர ஸூர்யர்கள்.

மீதினில்—இலங்கையின்மீது. இயங்குதல்—ஸஞ்சாரம் செய்தல். இவ்விசேஷணத்தால், இராவணன் தேவர்களனைவர்க்கும் மிருத்யுவாயிருந்தானென்பது விளங்கும். மும்மதிள்—மலையரண், நீரரண், காட்டரண் என்னும் முக்கோட்டைகளை யுடையதாம் இலங்கை. இராவணனுடைய ஒப்புயர்வற்ற செல்வத்தைக் கண்டு

அனுமானும் அளவற்ற ஆச்சரியமடைந்தானென்பர் வான்மீகி முனிவர். இப்படிப்பட்ட இலங்கையை வாளியின் அட்டனை என்று அந்வயம். வாளியாவது அம்பு. அது எப்படிப்பட்டதெனில்; அதன் கொடுமை தோற்ற மூன்று விசேஷணங்களிடுகிறார்; இருகால் வளைய ஒரு சிலை யொன்றியதும், ஈரெயிற்றதும், அழல்வாயதுமாம் அவ்வாளி. ஸ்ரீ சார்ங்க மென்னும் இராமபிரானது வில் இரண்டு கோடியும் வளைந்து நிற்குமென்றது இயல்பு நவிற்சி; ஸ்வபாவோக்தி. அந்த சார்ங்கத்திலே தொடுக்கப்பட்டதாம். ஈரெயிறு—ஈர்கின்ற எயிற்றையுடையது என்றுமாம். ஈர்தல்-கொல்லுதல். அட்டனை—முன்னிலை யொருமை வினைமுற்று. அடுதல்—தறித்தல்.

மூவடி நானிலம் வேண்டி
முப்புரி நூலொடு மானுரி யிலங்கு
மார்வினி னிருபிறப் பொருமாணாகி
ஒருமுறை யீரடி மூவுல களந்தனை

| | | | |
|---|---|---|---|
| ஒரு முறை | ஒரு காலத்தில் | | (மாவலியிடம் சென்று) |
| முப்புரி நூலொடு | யஜ்ஞோபவீதத்தோடு கூட | நானிலம் | பூமியிலே |
| | | மூ அடி | மூன்றடி நிலத்தை |
| | | வேண்டி | யாசித்து |
| மான் உரி | க்ருஷ்ணாஜிநமும் | | |
| இலங்கு | விளங்கா நின்ற | ஈர் அடி | இரண்டு திருவடிகளாலே |
| மார்வினின் | திருமார்பையுடைய | | |
| | | மூ உலகு | மூன்று லோகங்களையும் |
| இரு பிறப்பு ஒரு மாண் ஆகி | ஒரு ப்ராஹ்மண ப்ரஹ்மசாரியாகி | அளந்தனை | அளந்து கொண்டாய். |

—***— அம்பாலே காரியங்கொண்டபடியை அருளிச்செய்தார் கீழ்; அழகாலே காரியங்கொண்ட படியை அருளிச் செய்கிறார் இதில். இந்திரனுடைய குறையை நீக்கவேண்டி எம்பெருமான் குறிய மாணுருவாகி மாவலிபக்கல் சென்று மூவடி வேண்டிப் பெற்று உலகங்களையெல்லாம் அளந்து மாவலியைப் பாதாளத்தில் அழுத்தின வரலாறு ப்ரஸித்தமேயாம்.

நானிலம்—நான்காகிய நிலங்களையுடையதென்னப் பூமிக்குக் காரணப்பெயர்; நால்வகைநிலங்களாவன-முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்பன. காடும் காடுசார்ந்த இடமும் முல்லையாம்; மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சியாம்; நாடும் நாடுசார்ந்த இட

மும் மருதமாம்; கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தலாம். மற்றொன்றாகிய பாலைநிலம் பிராணிஸஞ்சாரத்திற்கு உரியதன்றென்று இங்கே விலக்கப்பட்டது. அது நீரும் நிழலுமில்லாத கொடு நிலம். பாலைக்குத்தனியே நிலமில்லையென்பதும், நால்வகை நிலங்களும் தத்தம் தன்மை கெட்ட விடத்தே பாலையாமென்பதும் சில ஆசிரியர் கொள்கை.

முப்புரிநூல்—ப்ரஹ்மசாரிகள் பூணும் யஜ்ஞோபவீதம் மூன்று புரியை யுடையதாம். (அதாவது-மூன்றுவடமுடையதாம்) மாணுரி-அந்தப்பூணு நூலில் க்ருஷ்ணாஜினத்தை முடிந்து அணிதல் மரபு. "மான்கொண்ட தோல் மார்பின் மாணியாய்" என்றார் பெரிய திருமொழியிலும். இருபிறப்பு—'த்விஜ:' என்றும், 'த்விஜந்மா' என்றும், 'த்விஜாதி:' என்றும் வடமொழியில் பார்ப்பனர் வழங்கப்படுவர். "ஜந்மநா ஜாயதே சூத்ர: கர்மணா ஜாயதே த்விஜ:" [யோனியிற்பிறப்பது ஒரு பிறவி; பிறகு வேதமோதுதல் முதலிய கருமங்களால் பிறப்பது இரண்டாம் பிறவி] என்று சொல்லப்பட்டுள்ளமை காண்க.

ஈரடி மூவுலகளந்தனை—நிலவுலகத்தையும் அதற்குக்கீழ்ப்பட்ட பாதாளலோகத்தையும் சேர்த்து ஒரு திருவடியாலும் மேலுலகத்தை மற்றொரு திருவடியாலும் ஆக ஈரடியாலே மூவுலகளந்தானென்க. .... .... .... ....

நாற்றிசை நடுங்க அஞ்சிறைப் பறவை
ஏறி, நால்வாய் மும்மதத் திருசெவி
ஒருதனி வேழத் தரந்தையை ஒருநாள்
இருநீர் மடுவுள் தீர்த்தனை...—

| | |
|---|---|
| ஒரு நாள் | ஒரு காலத்தில் |
| நால் திசை நடுங்க | எங்குமுள்ள ஜனங்களும் நடுங்கும்படியாக (மஹத்தான கோபாவேசத்தை ஏறிட்டுக்கொண்டு) |
| அம் சிறை, பறவை ஏறி | அழகிய சிறகையுடைய பெரிய திருவடியின்மீது ஏறிக்கொண்டு |
| இரு நீர் மடுவுள் | ஆழமான நீரையுடைய மடுவின் (கரையிலே எழுந்தருளி) |

| | | | | |
|---|---|---|---|---|
| நால வாய் | தொங்குகின்ற வாயையும் | ஒரு தனி வேழத்து | பரமவிலக்ஷணனை கஜேந்திராழ்வானுடைய | |
| மும்மதம் | மூவிடங்களில் மதநீர்ப் பெருக்கையும் | | | |
| | | அரந்தையை | துக்கத்தை | |
| இரு செவி | இரண்டு காதுகளை யும் உடைய | தீர்த்தனை | நீக்கியருளினாய். | |

—***— எம்பெருமானை ஆராதிப்பதற்காகத் தாமரைப்பூப் பறிக்கப் போன பொய்கையின் கண் முதலைவாயிலகப்பட்ட ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய கூக்குரலைக்கேட்டு எம்பெருமான் ஸ்ரீவைகுண்டத்தினின்று கருடாரூடனாய் ஓடிவந்து முதலையைக் கொன்று ஆனையைக் காத்தருளின கதை உலகப் பிரஸித்தம்.

கஜேந்திரன் 'ஆதிமூலமே!' என்று பெருமிடறு செய்து கூவினதைக் கேட்டவுடனே ஸ்ரீவைகுண்ட நிலயனை எம்பெருமான் திடுக்கிட்டு, பிராட்டிமாரையும் கையுதறி அரைகுலையத் தலைகுலையப் பெரிய திருவடியின்மீதேறி மனோவேகத்தினும் மிக்கவேகமாக ஓடிவந்த விசையைக் கண்டவர்களெல்லாரும் இன்ன செய்தியென்றறியாமல் 'இன்று ஏதோ பிரளயம் விளையப்போகிறது' என்று அஞ்சி நடுங்கினரென்கிறார் **நால்திசை நடுங்க** என்பதனால்.

**அம்சிறை**—கருடன் எம்பெருமானது திருவுள்ளத்தை யறிந்து வெகு வேகத்தோன்றச் சிறகை அறைந்து கொண்டு வந்தமை பற்றி **அஞ்சிறை** என்று அந்தச் சிறகைப் பாராட்டிக் கூறுகின்றன ரென்க.

**நால்வாய்**—நாலுதல்-தொங்குதல், யானைக்கு வாய் தொங்குதல் இயல்பு. **மும்மதம்**—இரண்டு கன்னங்களிலும் குறியிலும் ஆக மூவிடங்களில் யானைக்கு மதப்புனல் சோரும். **இருசெவி**—இரு என்று பெருமையைச் சொல்லிற்றாய், பெரிய காதுகளை யுடையது என்றுமாம். யானைக்கு வாய்தொங்குதலும் மதநீர் பெருகுதலும் காதுகள் பெரிதாயிருத்தலும் அதிசயமான விஷயமன்றே; இதைச் சொல்லி வருணிப்பதற்கு ப்ரயோஜநம் என்னெனில்;—ஒரு குழந்தை கிணற்றில் விழுந்து போக, அதனையெடுத்துக் கரையிலே போட்டவர்கள் 'அந்தோ! இதொரு காலழகும் இதொரு கையழகும் இதொரு தலையழகும் இதொரு முகவழகும் என்னே!' என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போவார்களன்றோ; அப்படியே எம்பெருமானும் யானையின் காலை முதலைவாயினின்றும் விடுவித்தபின்

அதனுடைய வாயும் செவியும் முதலிய அவயவங்களின் அழகிலே ஆழ்ந்து கரைந்தமை தோற்ற அந்த பகவத் ஸமாதியாலே ஆழ்வார் ஆனையை வருணிக்கின்றாரெனக.

இவ்விடத்தில் வியாக்கியான ஸ்ரீஸூக்தியின் போக்யதை அநுபவிக்கத்தக்கது:—"நால்வாய் மும்மதத் திருசெவி....என்றாற் போலே சொல்லுவதுக்குக் கருத்தென்னென்னில்; ப்ரஜை கிணற்றிலே விழுந்தால் 'காதுங் கண்டவாளியும் காலும் தலையும் வடிவும் இருந்தபடி காண்!' என்பாரைப் போலே இடர்ப்பட்ட, இதினுடைய அவயவங்கள் அவனுக்கு ஆகர்ஷகமாம்படியாலே சொல்லுகிறது" என்ற ஸ்ரீஸூக்தி காண்க.

ஒரு தனி வேழம்—பகவத் பக்தியில் ஒப்பற்ற கஜராஜன். அரந்தை—துன்பம். .... .... .... ....

... ... ... முத்தீ
நான்மறை ஐவகை வேள்வி அறுதொழில்
அந்தணர் வணங்குந் தன்மையை...—

| | | | |
|---|---|---|---|
| முத்தீ | மூவகை அக்நிகளையும் | அறு தொழில் | ஆறுவகைக் கருமங்களையும் உடையரான |
| நால் மறை | நால்வகை வேதங்களையும் | அந்தணர் | ப்ராஹ்மணர்களால் |
| ஐவகை வேள்வி | ஐவகை யஜ்ஞங்களையும் | வணங்கும் தன்மையை | வணங்கப்படுந் தன்மையை உடையையாயிராநின்றாய். |

—***— முத்தீ—கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்நி என்பவை த்ரேதாக்நிகளாம். நான்மறைகளாவன—ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்பன; இவை வேதவ்யாஸரால் பிரிக்கப்பட்ட பிரிவின் பெயர்களாதலால், அதற்கு முன்னிருந்த தைத்திரியம் பௌடியம் தலவகாரம் சாமம் என்ற நான்கும் என்று கொள்ளுதல் தகும்.

ஐவகை வேள்வி—ப்ரஹ்மயஜ்ஞம் தேவயஜ்ஞம் பூதயஜ்ஞம் பித்ருயஜ்ஞம் மநுஷ்யயஜ்ஞம் என்பன பஞ்சமஹாயஜ்ஞங்கள். ப்ரம்மயஜ்ஞமாவது 'ப்ரஹ்மயஜ்ஞப்ரச்நம்' என்று நின்றபடியாக வேதத்தில் ஒவ்வொரு ப்ரச்நம் ஓதுவது. தேவயஜ்ஞமாவது

அக்நிஹோத்ரம் செய்வது. பூதயஜ்ஞ மென்பது ப்ராணிகட்கு பலியிடுவது. பித்ருயஜ்ஞமென்பது பித்ருக்களை உத்தேசித்துத் தர்ப்பணம் விடுவது. மநுஷ்யயஜ்ஞமென்பது விருந்தாளிகளுக்கு உணவு முதலியன கொடுப்பது.

அறு தொழில்—தான் வேதமோதுதல், பிறர்களுக்கு ஓதுவித்தல், தான் யாகஞ்செய்தல், பிறர்க்கு யாகஞ் செய்வித்தல், தானங்கொடுத்தல், தானம் வாங்கிக்கொள்ளுதல் என்பன ஆறு கருமங்களாம். ஆக, த்ரேதாக்நிகளையும் நான்கு வேதங்களையும் பஞ்சமஹாயஜ்ஞங்களையும் ஷட்கருமங்களையும் நிரூபகங்களாக வுடைய வேதியர்களாலே ஸேவிக்கப்படுபவன் எம்பெருமான் என்றதாயிற்று. .... .... .... .... .... ....

... ஐம்புலன்<br>
அகத்தினுள் செறுத்து நான்குடனடக்கி<br>
முக்குணத் திரண்டவை யகற்றி ஒன்றினில்<br>
ஒன்றி நின்றாங்கிரு பிறப்பறுப்போர்<br>
அறியுந் தன்மையை, ... ... ... ...

| | | | |
|---|---|---|---|
| ஐம்புலன் | பஞ்சேந்திரியங்களை. | அகற்றி | விலக்கி |
| அகத்தினுள் செறுத்து | (வெளியில் பட்டிமேயவொண்ணாதபடி) உள்ளேயடக்கி | ஒன்றினில் | ஸத்வகுணமொன்றிலேயே |
| | | ஒன்றி நின்று | பொருந்தியிருந்து |
| நான்கு உடன் அடக்கி | உண்ணுதல், உறங்குதல், அஞ்சுதல், விஷய போகஞ்செய்தல் என்கிற நான்கையுங் கூட இல்லை செய்து | ஆங்கு | அப்படிப்பட்டநிலைமையின் பலனாக |
| | | இரு பிறப்பு அறுப்போர் | நீண்ட ஸம்ஸார துக்கத்தை நீக்கிக்கொள்ள வல்ல மகான்களாலே |
| முக்குணத்து | ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற மூன்று குணங்களில் | அறியும் தன்மையை | அறியத்தக்க ஸ்வபாவத்தை உடையையாயிரா நின்றாய். |
| இரண்டு அவை | ரஜஸ்ஸையும் தமஸ்ஸையும் | | |

—***—ஜிதேந்திரியர்களாய் ஸாத்விகர்களான யோகிகளால் யோக முறையில் ஸாக்ஷாத்கரிக்கத் தக்கவன் எம்பெருமான் என்கிறது. ஐம்புலன்களாவன—மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் பஞ்சேந்திரியங்கள்; இவற்றை அகத்தினுள் செறுத்து

லாவது—சப்தாதி விஷயங்களில் மூட்டாமல் அந்தரங்கனை பகவானிடத்திலே மூட்டுகை.

நான்கு உடனடக்கி—" ஆஹார நித்ரா பய மைதுநாநி ஸாமாந்ய மேதத் பசுபிர் நராணும் " என்றபடி உணவு உட்கொள்ளுதல், கண்ணுறங்குதல், எந்த வேளையில் என்ன தீங்கு நேரிடுமோவென்று பயப்பட்டுக்கொண்டிருத்தல், விஷய போகங்களை யநுபவித்தல் என்கிற இந்நான்கும் நாற்கால் விலங்குகட்கும் பொதுவாகையாலே இவற்றைத் தள்ளி ஞானத்தையே கடைப் பிடித்து என்றதாயிற்று.

முக்குணத்து இரண்டவை அகற்றி—ஸத்வகுணமென்றும் ரஜோகுண மென்றும் தமோகுண மென்றும் சொல்லப்படுகிற மூன்று குணங்களில் ரஜஸ்ஸும் தமஸ்ஸும் அந்யதாஜ்ஞான விபரீதஜ்ஞானங்களுக்குக் காரணமாதலால் அவற்றை யொழித்து, தத்துவ ஞானத்துக்குக் காரணமாகிய ஸத்வகுணத்தை யுடையராகி என்றபடி.

ஆக, இந்திரியங்களைப் பட்டி மேயாமலடக்கி, ஆஹார நித்ராபய மைதுநங்களை விலக்கி ஸத்வகுண நிஷ்டராயிருந்து யோகு புரிந்து அந்த யோகத்தின் பலனாக ஸம்ஸாரப் படுகுழியைப் புல் மூடச் செய்து நற்கதி நண்ணுகின்ற மஹா யோகிகளால் அறியக் கூடிய ஸ்வரூப ஸ்வபாவங்களை யுடையவன் எம்பெருமான் என்றதாயிற்று.

நான்குடனடக்கி என்பதற்கு—மனம் புத்தி ஆங்காரம் சித்தம் என்ற நான்கையும் அடக்கி என்றும்; பொய் சொல்லுதல் கோட்சொல்லுதல் கடுஞ்சொல் சொல்லுதல் பயனற்ற சொல் சொல்லுதல் என்ற நான்கு துர்ப்பாஷணங்களையும் விலக்கி என்றும் பொருள் கொள்ளுதலும் ஒக்கும்.

இருபிறப்பு என்றது—இருமை பெருமையாய் அநாதியாகையாலே நீண்டதாயுள்ள ஸம்ஸாரம் என்றபடி. அன்றியே, புண்ய பாபங்களாகிற இருகருமங்களாலே வரும் ஸம்ஸாரம் என்றுமாம்.

தன்மையை—' தன்மையன் ' என்பதன் முன்னிலை............*

... ... முக்கண் நாற்றோள்
ஐவா யரவோ டாறுபொதி சடையோன்
அறிவருந் தன்மைப் பெருமையுள் நின்றனை

| | | | |
|---|---|---|---|
| முக்கண் | மூன்று கண்களையும் | அறிவு அரு | அறியக்கூடாத |
| நால் தோள் | நான்கு தோள்களையும் | தனமை | ஸ்வபாவத்தை யுடையனா யிருக்கையாகிற |
| ஐ வாய் அரவோடு | ஐந்துவாயையுடைய பாம்பையும் | | |
| ஆறு பொதி சடையோன் | கங்காநதி அமைந்த ஜடையையும் உடையனான ருத்ரனுக்கு | பெருமையுள் | பெருமையிலே |
| | | நின்றனை | இராநின்றாய். |

—***— எவ்வளவு மேன்மையுடையரா யிருந்தாலும் ஸ்வப்ரயத்நத்தாலே எம்பெருமானைக் கண்டுவிட வேணுமென்று முயன்றால் அவர்கட்கு பகவத் விஷயம் அறியக்கூடியதல்ல என்று சாஸ்த்ரங்கள் கூறும். பரமசிவன் ‘நாம் முக்கண்ணுடையோம், அரவம் பூண்டபெருமையுடையோம், கங்கைநீர் தரித்த வலிமையுடையோம்’ என்று மேனாணித்திருந்தாலும் “பெண்ணுலாஞ் சடையினானும் பிரமனு முன்னைக் காண்பான், எண்ணிலா வூழியூழித் தவஞ் செய்தார் வெள்கி நிற்ப” (திருமாலை) என்றபடி அவனுக்கு பகவானுடைய ஸாக்ஷாத்காரம் வாய்க்கவில்லை யென்கிறது.

ஐவாயரவோடு—ஒரு காலத்தில் சிவபிரான் தன்னை மதியாத தாருகவனத்து முனிவர்களுடைய கருவத்தைப் பங்கஞ்செய்யவும் அவர்களது மனைவிமார்களின் கற்புநிலையைப் பரிசோதிக்கவும் கருதித் தான் ஒரு விடனாக வடிவங்கொண்டு அவரில்லந்தோறும் சென்று பிக்ஷாடநஞ் செய்து, தன்னை நோக்கிக் காதல் கொண்ட அம்முனி பத்நிகளின் கற்புநிலையைக் கெடச்செய்ய, அதுகண்டு பொறாமற் கோபம் மூண்ட அம்முனிவர்கள் அபிசார யாகமொன்று செய்து அவ்வோமத்தீயினின்று எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, முயலகன், வெண்டலை முதலியவற்றைச் சிவனைக்கொன்று வரும்படி ஏவ, சிவபெருமான், தன்மேற் பொங்கிவந்த நாகங்களை ஆபரணங்களாகவும் பூதங்களைத் தனது கணங்களாகவுங் கொண்டு மானைக் கையிலேந்திப் புலியைத் தோலையுரித்து உடுத்து முயலகனை முதுகிற் காலாலூன்றி வெண்டலையைக் கையாற் பற்றிச் சிரமே

லணிந்து இங்ஙனமே அவற்றையெல்லாம் பயனிலவாகச் செய்து விட்டனன் என்ற வரலாறு உணர்க. "நாகாபரணன்" என்று சிவ பிரானுக்கு ஒரு பெயர் வழங்கிவருதலும் இவ்வரலாறு பற்றியே யென்க.

ஆறு போதி சடையோன் என்ற விடத்து அறியவேண்டிய கதை:—எம்பெருமான் உலகளந்த காலத்தில் மேலே ஸத்யலோகத் திற் சென்ற அப்பெருமானது திருவடியைப் பிரமன் தன் கைக்கமண் டல தீர்த்தத்தாற் கழுவி விளக்க அந்த ஸ்ரீ பாத தீர்த்தமாகப் பெருகித் தேவலோகத்திலிருந்த ஆகாச கங்கையை, ஸூர்யகுலத் துப் பகீரத சக்ரவர்த்தி கபிலமுனிவனது கண்ணின் கோபத்திற்கு இலக்காய் உடலெரிந்து சாம்பலாய் நற்கதியிழந்த தனது மூதாதைய ரான ஸகரபுத்ரர் அறுபதினாயிரவரை நற்கதி பெறுவிக்கும் பொரு ட்டு நெடுங்காலம் தவஞ்செய்து மேலுலகத்திலிருந்து கீழுலகத்துக் குக் கொண்டுவருகையில், அவனது வேண்டுகோளாலும் சிவபிரான் தான் புனிதனாகவேண்டிய அபிநிவேசத்தாலும் அந்நதியை முடி யின்மேலேற்றுச் சிறிது சிறிதாகப் பூமியில் விட்டனன் என்பதாம்.

ஆக இவ்வகைகளாலே பெருமிடுக்கையுடையனாக ப்ரஸித்தனான சிவபிரானாலும் ஸ்வப்ரயத்நத்தாலே அறியவொண்ணாத ஸ்வரூப ஸ்வபாவங்களையுடையனா யிருப்பன் எம்பெருமான் என்றதாயிற்று.

தன்மைப் பெருமையுள் நின்றனை என்றது—இப்படிப்பட்ட [சிவனாலுமறியப் போகாத] தன்மையையுடையனாயிருக்கையாகிற பெருமை பொருந்தியவன் என்றவாறு. நின்றனை — முன்னிலை யொருமை வினைமுற்று.

ஏழுல கெயிற்றினிற் கொண்டனை, கூறிய
அறுசுவைப் பயனுமாயினை. சுடர்விடும்
ஐம்படை அங்கையுளமர்ந்தனை. சுந்தர
நாற்றோள் முந்நீர் வண்ண !, நின்னீரடி
ஒன்றிய மனத்தால், ஒருமதி முகத்து
மங்கையரிருவரும் மலரனவங்கையின்
முப்பொழுதும் வருட அறிதுயிலமர்ந்தனை.

| | | | |
|---|---|---|---|
| ஏழ் உலகு | உலகங்களை யெல்லாம் | நின் ஈர் அடி | உனது உபய பாதங்களை |
| எயிற்றினில் கொண்டனை | (ஸ்ரீ வராஹமாகிக்) கோட்டில் எடுத்துக் கொண்டாய்; | ஒன்றிய மனத்தால் | ஆழ்ந்த அன்புடன் |
| கூறிய அறு சுவை பயனும் ஆயினை | ப்ரஸித்தமாகச் சொல்லப்பட்டுள்ள ஆறு வகை ரஸங்களாகிற ப்ரயோஜநமும் நீயே யாயிராநின்றாய்; | ஒருமதி முகத்து மங்கையர் இருவரும் | விலக்ஷணனான சந்திரன் போன்ற திருமுகத்தை யுடைய திருமடந்தை மண்மடந்தை யிருவரும் |
| அம் கையுள் | அழகிய திருக்கையில் | மலர் அன அம் கையின் | மலர்போல் ஸுகுமாரமான (தங்களது) அழகிய கைகளாலே |
| சுடர் விடும் ஐ படை | ஒளிவிடாநின்ற பஞ்சாயுதங்களும் | | |
| அமர்ந்தனை | பொருந்தப் பெற்றாய்; | முப் பொழுதும் | எப்போதும் |
| சுந்தரம் நால் தோள் | அழகிய நான்கு திருத்தோள்களை யுடையனாய் | வருட | பிடிக்க |
| முந்நீர் வண்ண | கடல் போன்ற வடிவையு முடையனான எம்பெருமானே! | அறி துயில் அமர்ந்தனை | (ஆநந்தமாக) யோக நித்திரையில் எழுந்தருளி யிராநின்றாய் |

—***— [ஏழுலகு இத்யாதி.] ஹிரண்யகசிபுவின் உடன் பிறந்தவனான ஹிரண்யாக்ஷனென்னுங் கொடிய அசுரன் தன் வலிமையாற் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிச் சென்றபோது தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மஹாவராஹரூபியாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ்வசுரனை;நாடிக்கண்டு பொருது கோட்டினாற் குத்திக் கொன்று பாதாள லோகத்தைச் சார்ந்திருந்த பூமியைக் கோட்டினாற் குத்தி அங்கு நின்று எடுத்துக்கொண்டு வந்து பழையபடி விரித்தருளினன் என்ற வரலாறு இதில் அடங்கியது. இப்பொழுது நடக்கிற ச்வேத வராஹ கல்பத்துக்கு முந்தின பாத்மகல்பத்தைப் பற்றிய பிரளயத்தின் இறுதியில் ஸ்ரீமந்நாராயணன் ஏகார்ணவமான பிரளய ஜலத்தில் முழுகியிருந்த பூமியை மேலே யெடுக்க நினைத்து ஸ்ரீவராஹாவதாரத்தைச் செய்தருளிக் கோட்டுநுனியாற்

4

பூமியை எடுத்துவந்தனனென்ற வரலாறும் உண்டு. அதுவும் இங்கு அநுஸந்திக்கப்பட்டதாகலாம்.

ஏழுலகு என்றவிடத்துள்ள ஏழ் என்னுஞ் சொல் ஏழான எண்ணைக் குறிக்காமல் 'ஸகலமான' என்னும் பொருளைக் குறிக்குமென்க. பூமண்டலம் முழுவதையும் என்றபடி. அன்றியே, ஸப்த த்வீபங் [ஏழு தீவு]களையுடைய பூமண்டலம் என்னவுமாம். அவை யாவன—நாவலந்தீவு, இறலித்தீவு, குசையின்தீவு, கிரவுஞ்சத்தீவு, சான்மலித்தீவு, தெங்கின்தீவு, புட்கரத்தீவு என ஏழாம்.

கூறிய அறுசுவைப் பயனுமாயினை—உப்பு, புளிப்பு, துவர்ப்பு, இனிப்பு, கார்ப்பு, கைப்பு என அறுசுவையாம். இவை நிரம்பிய உணவுபோலே பரமபோக்யன் எம்பெருமான் என்றவாறு. "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்" என்று கொண்டிருப்பார்க்கு அநுபவ விஷயமாம் இது. "அச்சுவைக் கட்டியென்கோ அறுசுவை யடிசிலென்கோ" என்றார் நம்மாழ்வாரும்.

முந்நீர்—ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்னும் மூவகை நீரையும் உடையது கடல். கடல்வண்ணனே! என்றபடி.

[நின்னீரடி—அமர்ந்தனை.] "வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி" என்றும் "𑌪𑌦𑍍𑌮𑌾 𑌧𑌾𑌤𑍍𑌰𑍀 𑌕𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑌰𑌿𑌚𑌿𑌤 𑌚𑌰𑌣𑌂" [பத்மா தாத்ரீ கராப்யாம் பரிசித சரணம்] என்றும் சொல்லுகிறபடியே — திங்கள்போல் முகத்தரான திருமடந்தை மண்மடந்தை யிருவரும் தமது குஸுமஸௌகுமாரமான திருக்கைகளாலே திருவடிகளைப் பிடிக்க, ஆனந்தமாக யோக நித்திரை செய்தருள்பவனே! என்கை.

மலரன—மலரன்ன; மலர் போன்ற. அறிதுயில்—உறங்குவான் போல் யோகுசெய்யுந் துயில். அமர்ந்தனை—முன்னிலை வினைமுற்று. .... .... .... .... .... .... .

நெறிமுறை நால்வகை வருணமு மாயினை
மேதகு மைம்பெரும் பூதமும் நீயே
அறுபத முரலுங் கூந்தல் காரணம்
ஏழ்விடை யடங்கச் செற்றனை அறுவகைச்
சமயமு மறிவரு நிலையினை ஐம்பால்

ஓதியை ஆகத் திருத்தினை அறமுதல்
நான்கவையாய் மூர்த்தி மூன்றாய்
இருவகைப் பயனா யொன்றாய் விரிந்து
நின்றனை ... ... ... ... ...

| | |
|---|---|
| நெறி முறை | சாஸ்திர முறைப்படியே யுள்ள |
| நால் வகை வருணமும் ஆயினை | நான்கு ஜாதிகளின் மரியாதைக்கும் நிர்வாஹகனா யிராநின்றாய்; |
| மே தகும் ஐ பெரு பூதமும் நீயே | ஆன்மாக்கள் பொருந்தத்தக்க பஞ்ச மஹா பூதங்களுக்கும் ப்ரவர்த்தகனா யிராநின்றாய்; |
| அறுபதம் முரலும் கூந்தல் காரணம் | வண்டுகள் (மது பானத்திற்காக வந்துமொய்த்து) ரீங்காரம் செய்யப்பெற்ற கூந்தலையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக |
| எழ் விடை | எழு ரிஷபங்களையும் |
| அடங்க செற்றனை | வலியடக்கி நெரித்தாய்; |
| அறுவகை சமயமும் | பாஹ்ய குத்ருஷ்டி மதஸ்தர்களாலே |
| அறிவு அரு | அறிந்துகொள்ளக் கூடாத |
| நிலையினை | நிலைமையை யுடையனா யிராநின்றாய்; |
| ஐம்பால் ஓதியை | மென்மை குளிர்த்தி நறுமணம் கருமை நெடுமை என்னும், ஐந்து லக்ஷணங்களமைந்த கூந்தலை யுடையளான பிராட்டியை |
| ஆகத்து இருத்தினை | திருமார்பிலே தரித்துக் கொண் டிராநின்றாய்; |
| அறம் முதல் நான்கு அவை ஆய் | தருமம் முதலிய நான்கு புருஷார்த் தங்களையும் கொடுப்பவனாய் |
| மூன்று மூர்த்தி ஆய் | த்ரிமூர்த்தி ஸ்வரூபியாய் |
| இரு வகை பயன் ஆய் | ஸுக துக்கங்களிரண்டுக்கும் நிர்வாஹகனாய் |
| ஒன்று ஆய் விரிந்து நின்றனை. | தான் ஒருவனா யிருந்தும் பிரபஞ்ச முழுவதிலும் வியாபித்து நின்றாய். |

—***—நெறிமுறை....ஆயினை—பிராமணர் க்ஷத்ரியர் வைச்யர் சூத்ரர் என வருணங்கள் நான்கு. விராட் புருஷனான எம்பெருமானுடைய திருமுகத்தினின்றும் பிராமணனும், புஜத்தினின்று க்ஷத்ரியனும், துடையினின்று வைச்யனும், திருவடியினின்று சூத்ரனும் உண்டானதாக வேதங்கள் கூறுகின்றமையால் நால்வகை வருணமும் எம்பெருமானொருவனேயாயினன். அன்றி, அந்தந்த ஜாதிகட்கு உரிய கருமங்களை சாஸ்திரமுகத்தாலே விதித்து அந்தந்த வருணங்

களின் மரியாதை வழுவாமல் நடத்திக்கொண்டு போகிறவன் நீ என்றதாகவுமாம். இங்ஙனன்றியும், வர்ணாச்ரம வொழுக்கங்கள் வழுவாமல் இருக்கிற அவ்வவர்களாலே யதாயோக்யமாக ஆராதிக்கப்படுகின்றாய் என்றதாகவுமாம்.

வருணம்—வர்ண மென்ற வட சொல் விகாரம். முற்காலத்தில் ஒரு வம்சத்திலே நின்று விவாஹாதிகள் நடந்து வந்தபோது உடல் நிறத்தைக் கொண்டே இன்னான் பிராமணன், இன்னான் க்ஷத்ரியன் என்றிப்படி அறியக்கூடிய நிலைமையிலிருந்தமையால் நிறமென்னும் பொருளதான வர்ண சப்தத்தை யிட்டு ஜாதியை வ்யவஹரித்து வந்தனராம்.

மேதகும் ஐம்பெரும் பூதமும் நீயே—நிலம் நீர் தீ கால் விசும்பு என்கிற பஞ்ச மஹா பூதங்களும் நீயிட்ட வழக்கு என்றபடி. மேதகும் என்றது—ஆத்மாக்கள் பொருந்தி வர்த்திப்பதற்குத் தகுதியான என்றபடி. சரீரமற்ற ஆத்மா ஸுக துக்காதிகளை அநுபவிக்க இயலாதாகையாலே ஆத்மாக்கள் விஷயாநுபவத்திலே மேவுவதற்குத் தகுதியாகவுள்ளவை பஞ்ச பூதங்களாம். ஆத்மாக்கள் புகும் சரீரங்கள் பஞ்சபூத மயங்களிறே. அவரவர்களுடைய கர்மங்களுக்குத் தகுதியாக உண்டாகிற பாஞ்ச பௌதிக சரீரங்களுக்கு அந்தராத்மாவாயிராநின்றாய் என்றதாகவுமாம்.

அறுபதம்....சேற்றனை—கும்பனென்னும் இடையர் தலைவனது மகளும் நீளாதேவியின் அம்சமாகப் பிறந்ததனால் நீளா என்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளுமான நப்பின்னைப்பிராட்டியை மணஞ்செய்துகொள்ளுதற்காக அவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யார்க்கும் அடங்காத அஸுராவேசம் பெற்ற ஏழு எருதுகளையும் கண்ணபிரான் ஏழு திருவுருக்கொண்டு சென்று வலியடக்கி அப்பிராட்டியை மணஞ் செய்து கொண்டனன் என்ற வரலாறு இங்கே உணரத்தக்கது. வண்டு ஆறுகாலுடைமை பற்றி அறுபதம் என்று பெயர் பெற்றது; ஷட்பதமென்பர் வடநூலாரும். நப்பின்னை தனது கூந்தலில் மதுவெள்ள மொழுகும் நறுமலர்களை அணிந்து கொண்டிருப்பளாதலால் அவளது கூந்தலில் வண்டுகள் மொய்த்து முரலா நிற்கும். அறுபத முரலுங் கூந்தலை யுடையவள் என்னும் பொருளில்...............கூந்தல் என்றது அன்மொழித் தொகை. சேற்றனை—முன்னிலை யொருமை வினைமுற்று.

அறுவகைச் சமயமும் அறிவரு நிலையினை—சாக்யர் உலூக்யர் பௌத்தர் சார்வாகர் பாசுபதர் காணாதர் என்றிப்படி சொல்லப் படுகிற புறமதத்தவர்களாலே அறியக்கூடாத ஸ்வரூப ரூப குண விபூதிகளையுடையை என்றபடி. எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையைப் பெற்ற ஆழ்வார்போல்வார்க்கு அவை தெரியுமேயன்றி மற்றையோர்க்குத் தெரிய விரகில்லையிறே.

ஐம்பாலோதியை ஆகத்திருத்தினை—ஓதி யென்று கூந்தலுக் குப் பெயர். கூந்தலின் பான்மை ஐவகையதாம்; மிருதுவாயிருத்தல் குளிர்ந்திருத்தல் நறுமணம் மிக்கிருத்தல் கறுத்திருத்தல் நீண்டிருத் தல் ஆகிய இவை உத்தம கேச லக்ஷணங்களாம். அத்தகையசிறந்த கூந்தலையுடையளான திருமாமகளைத் திருமார்பிலே கொண்டுள்ளாய் என்றவாறு.

ஐம்பா லோதி—என்றவிதுவும் அன்மொழித்தொகை.

அறமுதல் நான்கவையாய்—தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த்தங்களையும் அர்த்திகட்கு அளிப்பவன் என்கை.

மூர்த்தி மூன்றாய்—படைப்புத் தொழிலை நடத்துகைக்காக நான்முகனை ஆவேசித்தும் ஸம்ஹாரத்தொழிலை நடத்துகைக்காகச் சிவபிரானை ஆவேசித்தும் ரக்ஷணத் தொழிலை நடத்துகைக்குத் தானான தன்மையிலே இருந்தும் ஆக விப்படி மூவுருவினனாய் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவாயிரா நின்றாய் என்கை.

இருவகைப் பயனாய்—சேதநர் செய்யுங் கருமங்களுக்கெல் லாம் ஸுகமாவது துக்கமாவது பயனாகத் தேறும். கருமம் வாயி லாக அந்த ஸுகதுக்கங்களுக்கு ப்ரயோஜகன் நீ என்கை.

ஒன்றாய் விரிந்து நின்றனை—ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்ட ப்ரஹ்ம மான தானே ஸ்தூல சிதசித்விசிஷ்ட ப்ரஹ்மமாகக் காணப்படு கின்றமையைக் கூறியவாறு. திருவாய்மொழியில், "மாயா வாம னனே மதுசூதா நீயருளாய், தீயாய் நீராய் நிலனாய் விசும்பாய்க் காலாய், தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய், நீயாய் நீ நின்றவாறு இவை என்ன நியாயங்களே" என்று தொடங்கி அருளிச்செய்த பாசுரங்கள் இங்கே அநுஸந்தேயம்.

ஆக, இவ்வளவில் எழுகூற்றிருக்கை என்றதன் இலக்கணப்படி தொடுக்க வேண்டிய சொல்மாலைகள் முற்றுப்பெற்றன. இனி மேலுள்ள சில அடிகள் ஸ்தோத்ர ஸமாபநம்.

... ... ... குன்ற மதுமலர்ச் சோலை
வண்கொடிப் படப்பை வருபுனல் பொன்னி
மாமணி யலைக்குஞ் செந்நெலொண் கழனித்
திகழ்வன முடுத்த கற்போர் புரிசெய்
கனக மாளிகை நிமிர்கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும் செல்வம் மல்குதென்
திருக்குடந்தை யந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க வாடர வமளியி லறிதுயில்
அமர்ந்த பரமநின் னடியிணை பணிவன்
வருமிட ரகல மாற்றோ வினையே-

திருவெழுகூற்றிருக்கை முற்றிற்று.

| | |
|---|---|
| குன்ற மது | குன்றாத (நிறைந்த) தேனையுடைய |
| மலர் சோலை | பூக்கள் நிறைந்த சோலைகளை யுடையதும் |
| வண் கொடி படப்பை | வெற்றிலைத் தோட்டங்களை யுடையதும் |
| வரு புனல் | எப்போதும் பெருகுகின்ற தீர்த்தத்தை யுடைய |
| பொன்னி | காவேரியானது |
| மா மணி | சிறந்த ரத்னங்களை |
| அலைக்கும் | அலை யெறிந்து கொழிக்கப் பெற்றதும் |
| செந்நெல் ஒண் கழனி | செந்நெற் பயிர்களாலே அழகிய கழனிகளை யுடையதும் |
| திகழ் வனம் உடுத்த | விளங்குகின்ற வனங்களை நாற்புறங்களிலு முடையதும் |
| கற்போர் புரி செய் | வித்வான்களுடைய நகரமாகச் செய்யப் பெற்றதும் |
| கனகம் மாளிகை நிமிர் | பொன்மயமான மாளிகைகளினின்றும் மேல்முகமாக ஓங்குகின்ற |
| கொடி | த்வஜங்களானவை |
| விசும்பில் | ஆகாயத்திலுள்ள |
| இள பிறை | பாலசந்திரனை |
| துவக்கும் | ஸ்பர்சிக்கப் பெற்றதும் |
| செல்வம் மல்கு | செல்வம் நிறைந்ததுமான |
| தென் திரு குடந்தை | தென் திருக்குடந்தையிலே |
| அந்தணர் | பிராமணர்கள் |
| மந்திரம் மொழியுடன் வணங்க | வேதவாக்குகளைச் சொல்லிக் கொண்டு வணங்கும்படியாக |
| ஆடு அரவு அமளியில் | படமெடுத்தாடுகிற ஆதிசேஷனாகிற சயனத்தில் |

| | | | |
|---|---|---|---|
| அறி துயில் அமர்ந்த | யோக நித்திரை செய்வதில் ஆஸக்தனை | நின் அடி இணை பணிவன் | உன்னுடைய உபய பாதங்களை ஆச்ரயிக்கின்றேன்; |
| பரம | ஸர்வேச்வரனே ! | வினை | ஸம்ஸாரத் துன்பங்களை |
| வரும் இடர் அகல | இந்த ஸம்ஸாரத்தில் நேரக் கூடிய துக்கங்கள் நீங்க | மாற்று | போக்கி யருளவேணும். |

—***— " ஒரு பேருந்தி " என்று தொடங்கி " ஒன்றாய் விரிந்து நின்றனை " என்னுமளவும், எம்பெருமான் ஆச்ரிதர்களைக் காத்தருள்வதற்காகச் செய்த செயல்களையும் மற்றும் அவனுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களையும் பரக்கப் பேசி, மேற்கூறிய திருக்குணங்களெல்லாம் செவ்வனே விளங்கத் திருக்குடந்தையில் கிடக்கிற கிடையிலே ஈடுபட்டு அங்கே சரணாகதி பண்ணித் தலைக்கட்டுகிறார்.

திருக்குடந்தையின் நீர்வளம் நிலவளம் முதலியவற்றைச் சில விசேஷணங்களால் சிறப்பித்துக் கூறுகின்றார். எப்போதும் வற்றாத தேன் வெள்ளங்களையுடைய பூஞ்சோலைகள் சூழ்ந்ததும், பல பல ரத்னங்களைக் கொழித்துக்கொண்டு வருகிற காவிரி நீர் பாயப் பெற்றதும், அக்காவிரியின் நீர்வளத்தாலே செந்நெற்பயிர்கள் நன்றாக விளையப்பெற்ற கழனிகள் கண்ட விடமெங்கும் ஓங்கப் பெற்றதும், வித்வான்கள் வாழப்பெற்றதும், சந்திர மண்டலம் வரையில் நீண்டு விளங்குகின்ற கனக மாளிகைகள் திகழப்பெற்றதும், பல்வகைச் செல்வமும் நிறையப் பெற்றதுமான திருக்குடந்தையிலே, அந்தணர்கள் புருஷஸூக்தம் முதலிய வேதவாக்கியங்களை அநுஸந்தித்துக் கொண்டு வந்து பணியும்படியாக சேஷசயனத்திலே திருக்கண் வளர்ந்தருளும் நெடுமாலே ! எனது தாபமெல்லாம் தீரும்படி உன்றன் திருவடியிணைகளைப் பணிகின்றேன் ; இனியாகிலும் எனது ஸம்ஸார தாபங்கள் தீரும்படி அருள் புரியவேணும்—என்று ஆர்த்தராய்ச் சரணம் புகுந்து தலைக்கட்டினாராயிற்று.

கற்போர் புரி செய் என்றவிடத்து இரண்டு வகையான பாடமும் அதற்கு ஏற்ப அர்த்த பேதமும் உண்டு;—புரி செய் என்பது ஒரு பாடம் ; புரிசை என்பது மற்றொரு பாடம்.

" வித்வான்கள் படுகாடு கிடக்கும் நகரி " என்ற பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திக்குத் தகுதியாகப் புரி செய் என்ற பாடம் கொள்ளத்தக்கது ; புரீ என்ற வடசொல் நகரமெனப் பொருள்

படும்; கற்போர்களுடைய [வித்வான்களுடைய] புரியாகச் செய்யப் பட்டதென்க. மற்றொரு சிறிய வியாக்கியானத்திலே "தொழில் ஓரப்படாநின்றுள்ள மதிள்களையு முடையதாய்" என்ற ஸ்ரீஸூக்திக்குத் தகுதியாகப் புரிசை என்ற பாடம் கொள்ளத்தக்கது.

"கற்பு ஓர் புரிசை" என்று பிரித்து, நல்ல வேலைப்பாடுகளை யுடைய திருமதில்களை யுடைத்தான என்று கொள்க. புரிசை என்ற ஒரு பாடத்திலேயே இரண்டு வகைப் பொருள்களையும் பொருந்த விடலா மென்பாருமுளர். நிற்க.

கனக மாளிகைகளினின்றும் நிமிர்ந்த கொடியானது விசும்பி லிளம்பிறையைத் துவக்குமென்ற அதிசயோக்தியினால் அவ்விடத்துத் திருமாளிகைகளின் ஓக்கம் தெரிவிக்கப்பட்டதாகும்.

ஆடு அரவு—எம்பெருமான் எப்போதும் தன்னோடு அணைந்திருக்கப் பெற்றதனால் மகிழ்ச்சிக்குப் போக்குவீடாகப் படமெடுத்தாடுவன் திருவனந்தாழ்வான். அமளி—படுக்கை, அறிதுயில்—ஜாகரணத்தோடு கூடிய நித்ரை; அதாவது யோக நித்ரை, * உறங்குவான் போல் யோகுசெய்யும் பெருமானிறே.

ஆக இப்பிரபந்தத்தால்—தம்முடைய ஆர்த்தி யெல்லாந் தோற்றத் திருவடிகளிலே தீர்க்க சரணாகதி பண்ணியும் இன்னும் இவரைக் கொண்டு சில திவ்ய ப்ரபந்தங்களை வெளியிடுவித்து உலகத்தை வாழ்விக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றிய எம்பெருமான் இவ்வாழ்வார்க்கு வந்து முகங்காட்டா தொழியவே, இனி மடலூரப் புகுகிறார் என்று—மேல் திருமடல் பிரபந்தத்தோடே இதற்கு ஸங்கதி கண்டு கொள்க. .... .... .... .... .... ....*

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

## திருவெழுகூற்றிருக்கை உரை

முற்றிற்று.

ஸ்ரீ:

முடிவில் அநுஸந்திக்கும் தனிப்பாடல்.

(கம்பர் பாடிய தென்பர்)

[கட்டளைக் கலித்துறை.]

இடங்கொண்ட நெஞ்சத் திணங்கிக் கிடப்பன
என்றும் பொன்னித்
தடங்கொண்ட தாமரை சூழும் மலர்ந்த
தண்பூங் குடந்தை
விடங்கொண்ட வெண்பல் கருந்துத்தி
செங்கண் தழலுமிழ்வாய்
படங்கொண்ட பாம்பணைப் பள்ளிகொண்டான்
திருப்பாதங்களே.

பதவுரை.

| | |
|---|---|
| பொன்னி தடம் கொண்ட | காவேரியின் கரையிலுள்ளதும் |
| சூழும் | நாற்புறங்களிலும் |
| தாமரை மலர்ந்த | தாமரைப் பூக்கள் மலர்ந்திருக்கப் பெற்றதும் |
| தண் | குளிர்ச்சி பொருந்தியதும். |
| பூ | அழகியதுமான |
| குடந்தை | திருக்குடந்தையில்-, |
| விடம் கொண்ட வெண் பல் | விஷமுள்ள வெளுத்த பற்களையும் |
| கரு துத்தி | கரிய துத்தியையும் |
| செம் கண் | சிவந்த கண்ணையும் |
| தழல் உமிழ் வாய் | நெருப்பைக் கக்குகிற வாயையும் |
| படம் கொண்ட | படங்களையும் உடைய |
| பாம்பு அணை | திருவனந்தாழ்வானுகிற சயனத்தில் |
| பள்ளி கொண்டான் | பள்ளிகொண்டருள்கின்ற ஆராவமுதனுடைய |
| திரு பாதங்கள் | திருவடிகளானவை |
| இடம் கொண்ட நெஞ்சத்து | விசாலமான (எனது) நெஞ்சினுள்ளே |
| என்றும் | எப்போதும் |
| இணங்கி கிடப்பன | பொருந்தியிருப்பவைகளாம். |

—***— இது ஆழ்வார் தாம் அநுஸந்திக்கிற பாவனையாகவே இயற்றப்பட்ட பாசுரம். காவிரியாற்றின் கரையிலேயுள்ள பரம போக்யமான திருக்குடந்தையிலே திருவனந்தாழ்வான்மீது திருக்கண்வளர்கின்ற ஆராவமுதனுடைய திருவடிகள் ஒருகாலும் என்னெஞ்சைவிட்டு நீங்கா என்றதாயிற்று. .... .... .... *

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

# திருவெழுகூற்றிருக்கையின் தாத்பர்ய ஸங்க்ரஹம்.

ஒருகால் திருநாபிக்கமலத்தில் நான்முகனைப் படைத்தவனே! ஸூர்ய சந்திராதிகள் அஞ்சி நடுங்குவதற்குக் காரணமாயிருந்த இலங்கையை நீறுக்கினவனே! மாவலிபக்கல் வாமநப்ரஹ்மசாரியாய்ச் சென்று மூவடிமண் இரந்து பெற்று ஈரடியாலே உலகமெல்லா மளந்தவனே! பெரிய திருவடிமீதேறி மடுவின் கரையிலே வந்து கஜேந்திரனைக் காத்தருளினவனே! நெறிமுறை நின்ற அந்தணர்களால் வணங்கப்படுபவனே! ஜிதேந்திரியர்களான ஸாத்விகர்களாலே அறியக்கூடிய ஸ்வரூபத்தையுடையவனே! பரமசிவனாலும் அறியவொண்ணாதபெருமை பொருந்தியவனே! வராஹாவதாரஞ்செய்து பூமியை உத்தரித்தவனே! அறுசுவைப்பயனுமானவனே! பஞ்சாயுதாழ்வார்களைத் திருக்கையில் தரிப்பவனே! சதுர்ப்புஜனே! கடல்வண்ணனே! திருமகளும் மண்மகளும் அன்புடன் திருவடிவருடத் துயில் கொள்பவனே! ப்ராஹ்மணாதி நாலுவருணங்களுக்கும ப்ரதிஷ்டாபகனே! பஞ்சபூத சரீரனே! நப்பின்னைப் பிராட்டிக்காக ஏழ் விடைகளை வலியடக்கினவனே! புறமதத்தவர்களாலறியவொண்ணாத ஸ்வரூபஸ்வபாவங்களையுடையவனே! திருமகள்சேர்மார்பனே! சதுர்வித புருஷார்த்த ஸ்வரூபியே! த்ரிமூர்த்திஸ்வரூபியே! ஸுக துக்க நிர்வாஹகனே! பிரபஞ்சமெங்கும் பரந்து நிற்கும் மூலப் பொருளே! பரமவிலக்ஷணமான திருக்குடந்தையிலே திருக்கண் துயில்பவனே! உன்னை அடிபணிகின்ற அடியேனுடைய தீவினைகளையெல்லாம் தீர்த்தருளவேணும்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

---

பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர்

இயற்றிய

திருவெழுகூற்றிருக்கை திவ்யார்த்த தீபிகை

முற்றிற்று.

---